**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 54/2018 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | இந்திரா |
| Father's Name/Husband Name: | | ராமச்சந்திரன் |
| Village | : | வையங்குடி |
| Taluk | : | திட்டக்குடி |
| Age | : | 51/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னையில் பல்லாவரம் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் புகாரினை நான் தான் மங்களமேடு போலிசாரிடம் கொடுத்தது தான். புகார் சமயத்தில் நான் அகரம்சீகூர் பார்டரில் உள்ள என் கணவர் ராமச்சந்திரன் என்பவர் வீட்டில் வசித்த போது கொடுத்த புகார் ஆகும். எனக்கும் எனது கணவர் ராமச்சந்திரன் என்பவருக்கும் திருமணமாகி 29 ஆண்டுகள் ஆகிவிட்டது. எனக்கு 3 பெண் குழந்தைகள், ஒரு ஆண் குழந்தை பிறந்தார்கள். எனது கணவர் ராமச்சந்திரன் இறந்து தற்போது 9 ஆண்டுகள் ஆகிறது. எனக்கும் எனது கணவருக்கும் திருமணமாகி வையங்குடி கிராமத்தில் என் மாமியார் வீட்டில் குடியிருந்தோம்.

அகரம்சீகூர் பகுதியில் கடை இருந்ததால் அதனை பார்ப்பதற்காக என்னுடைய கணவர் அங்கு சென்றுவருவார். அந்த வகையில் 1ம் எதிரிக்கும் எனது கணவருக்கம் பழக்கம் ஏற்பட்டு என் கணவரும் 1ம் எதிரியும் அகரம்சீகூரில் உள்ள வீட்டில் ஒன்றாக வசித்து வந்ததாக நான் மற்றவர்கள் மூலம் தெரிந்து கொண்டேன். பின்னர் தகவல் அறிந்த நான் என் பிள்ளைகளுடன் அகரம்சீகூரில் உள்ள எனது கணவர் வீட்டிற்கு நான் வந்து குழந்தைகளுடன் தங்கியிருந்தேன். 5 ஆண்டுகள் அங்கு வசித்தோம். அங்கு சண்டை சச்சரவாகவே இருந்தது. எனது கணவர் 2017ம் வருடத்தில் உடல்நலக் குறைவின் காரணமாக இறந்து போய்விட்டார். எனக்கு எந்த ஆதரவும் இல்லை என்பதால் சென்னையில் உள்ள எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

நான் சென்னை செல்வதால் எனக்கும் எனது குழந்தைகளுக்கும் அகரம்சீகூர் உள்ள வீட்டில் ஒரு அறையும் ஒதுக்கி அங்கு 1ம் எதிரி வாழ்ந்து வந்தார். ஒரு பாத்ரூம் என்பதால் அடிக்கடி பிரச்சனை வந்து கொண்டிருந்தது. நான் சென்னையிலிருந்து அவ்வப்போது அகரம்சீகூர் வீட்டிற்கு வந்து செல்வது வழக்கம். கடந்த 2018ம் தேதியன்று ஒரு நாள் மாலை நேரத்தில் நானும் எனது மகள் அஷ்டலெட்சுமி என்பவரும் அங்கிருந்த போது 1ம் எதிரியும் அவருடைய அக்கா லெட்சுமி மற்றும் அக்காவின் மகன் பிரபு ஆகிய மூவரும் வந்து உனக்கு இந்த வீட்டில் வேலை என்று சொல்லி வெளியே போ என்று சொல்லியும் என்னை கம்பி வைத்து அடித்தார்கள். கை, கால் ஆகிய இடங்களிலும் மேலும் உடலில் பல இடங்களில் எனக்கு அடிப்பட்டது.

3ம் எதிரி தன் கையில் கம்பியை வைத்துக் கொண்டு வெளியே வந்தால் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டினார். எனது மகள் சம்பவத்தை தடுத்த போது அருந்தவம் என்பவர் என் மகளின் கைகளில் கிள்ளி காயத்தினை ஏற்படுத்தினார். 3ம் எதிரி என் மகளின் முடியை பிடித்து இழுத்து கம்பியால் என் மகளின் உடம்பில் அடித்தார். நாங்கள் கத்தும் சத்தம் கேட்டு அருகில் கடையில் இருந்த நபர்கள் 3ம் எதிரியை தடுத்து அங்கிருந்து அனுப்பி வைத்தார்கள்.

எனக்கு எதிரிகள் கைகளால் அடித்து காலால் உதைத்ததால் வலி ஏற்பட்டும், எனது மகளுக்கு கையில் ஏற்பட்ட நகத்தால் கிள்ளிய ஏற்பட்ட காயத்திற்காக திட்டக்குடி மருத்துவமனைக்கு செல்ல முற்பட்ட போது எதிரிகள் தடுத்தார்கள் பின்னர் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை எடுத்துக் கொண்டோம். பின்னர் மறுநாள் காவல்

நிலையம் வந்து எதிரிகளின் செய்கையை குறித்து புகார் கொடுத்தேன். காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் மற்றும் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் . அந்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் எங்களுக்கும் சண்டை நடந்த இடம் அரசாங்க இடமா அல்லது தனியார் இடமா என்றால் எங்களுடைய வீட்டிற்குள் நடந்தது. புகார் கொடுக்கும்போது எந்த முகவரியை காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் அகரம்சீகூர் பார்டர். புகாரை யார் எழுதினார்கள் என்றால் மங்களமேடு காவல் ஆய்வாளர் அண்ணாதுரை அவர்கள் எழுதினார்கள். எந்த தேதியில் புகாரை நான் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை.

சண்டை நடந்தவுடன் திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான், அங்கு போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். சண்டை நடந்த அன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை மறுநாள் தான் கொடுத்தேன். என்னை ஆண் காவலர் விசாரித்தார்களா அல்லது பெண் காவலர் விசாரித்தார்களா என்றால் காவல் ஆய்வாளர் அண்ணாதுரை விசாரித்தார். சம்பவம் நடந்த இடத்தை போலிசாருக்கு யார் அடையாளம் காண்பித்தார்கள் என்றால் நாங்கள் தான்.

3ம் எதிரி கம்பியால் என்னை தாக்கிய விவரத்தை போலிசாரிடம் சொன்னோமா என்றால் சொன்னோம். கம்பியால் என்னை அடித்தார்களா என்றால் ஆமாம். கம்பியால் அடித்ததில் எனக்கு இரத்தம் வந்ததா என்றால் உடம்பில் மாறி மாறி அடித்ததால் வீக்கம் தான் ஏற்பட்டது. எனது மகளை எதிரிகள் கிள்ளியதால் இரத்தம் காயம் ஏற்பட்டதற்கு மருத்துவமனையில் இரத்த பரிசோதனை செய்தார்களா என்றால் இல்லை, மருந்து போட்டு முதலுதவி தான் செய்தார்கள்.

எதிரிகள் என்னை தாக்கியதாக சொல்லப்படும் இரும்பு ராடை போலிசாரிடம் அடையாளம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். இரும்பு ராடை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். 1ம் எதிரி திட்டக்குடி நீதிமன்றத்தில் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் இதுநாள் வரை தெரியாது.

எனது கணவர் இறந்த பிறகு வையங்குடியில் நடக்கின்ற நல்லது, கெட்டது நிகழ்ச்சிக்கு செல்வேனா என்றால் செல்வேன். அங்கிருக்கும் எனது உறவினர்கள் மற்றும் பங்காளிகள் என்னுடன் பேசுவார்களா என்றால் பேசுவார்கள். திட்டக்குடி சார்பு நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு OS.189/2024 என்ற வழக்கில் 1ம் எதிரி பாகப்பரிவினை கோரி எங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்து அழைப்பாணை இதுநாள் வரை நான் பெறவில்லை மேலும் எனக்கு எந்த தகவலும் தெரியாது. அவ்வழக்கில் நான் ஆஜராகாததால் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

நான் கொடுத்த புகாரை போலிசார் எழுதி என்னிடம் படித்துக் காண்பித்தாரா என்றால் படித்துக்காண்பித்தார். முதல் சாட்சியத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் நான் கொடுத்த புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் நகலினை போலிசார் இலவசமாக எனக்கு கொடுத்தார்களா என்றால் இல்லை.

நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், 1ம் எதிரியின் மைனர் மகள் சுபாஷினிக்கு சொத்தில் பங்கு கேட்டதால் அவருக்கு எதிராக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் எங்களை அடிக்கவும் இல்லை என்றாலும் நாங்கள் தான் எதிரிகளை அடித்தோம் என்றாலும் சரியல்ல. நான் சொல்லச் சொல்ல போலிசார் டைப் செய்தார்களா அல்லது கையால் எழுதினார்களா என்றால் கையால் எழுதினார்கள்.

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.